காலத்தில், இந்த திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டுகின்ற வகையில், மறுபடியும் அதனைப் பரிசீலித்து, அந்த மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா; நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இராமநாதபுரம் மாவட்டம் அச்சன்குளத்தில் 12,500 கதிர்களுடன் ஒரு கூட்டுறவு நூற்பாலை செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களுக்கு, தக்க செயற்குறிப்புகள் இங்கே இல்லை. அவர் அதுகுறித்து தனிக் கேள்வி போடுவார்களேயானால், அதுகுறித்து தக்க குறிப்புகள் எடுத்துரைக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று 'தாட்கோ' உதவியுடன் பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மூலதனம்-முதலீடு-செய்யப்பட்டு, அந்த கூட்டுறவு நூறபாலைகள் எல்லாம் சரியாக இயங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'தாட்கோ' நிதியுதவியுடன் செயல்படுகிற நூற்பாலைகள் எல்லாம் சரியாகச் செயல்படும் பொருட்டு, அவற்றை 'தாட்கோ' நிர்வாகத்திடமே வழங்குவதற்கு உத்தரவிட முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: நீங்கள் ஏற்கனவே கொடுத்ததற்கே தனிக் கேள்வி போடுமாறு தெரிவிக்கப்பட்டது. நீங்கள் இப்போது முழுவதுமாக 'டிஃப்ரண்ட்'-ஆக இன்னொரு கேள்வியைக் கேட்கிறீர்கள். இதற்கு தனிக் கேள்வியைப் போடவும்.

வினா எண் 89, திரு. க. குப்பன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

89--

திருவொற்றியூர் பகுதியில் கடல் அரிப்பு தடுப்புத் திட்டம்.

* *9752*–**திரு. க. குப்பன்:**

1993 மார்ச் 16]

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருவொற்றியூர் பகுதியில் கடல் அரிப்பு அதிகமாக ஏற்படுவதைத் தடுக்க அரசு ஏதேனும் திட்டம் வகுத்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வடசென்னைப் பகுதியில், எண்ணூர் நெடுஞ்சாலையில் கடலரிப்பைத் தடுப்பதற்காக, 1991-92 ஆம் ஆண்டு, ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகள் முடிக்கப்பட்டன. அதற்குப் பின்னாலே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, கடலரிப்பினைத் தடுக்கும்பொருட்டு, மிகச்சீரிய முறையில் முயற்சிகள் மேற்கொண்டு, அவர்கள் நேரடியாக அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஏறத்தாழ 4 கோடியே 24 லட்சம் ரூபாய் ஒதுக்கி, 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. 1993-94-ஆம் ஆண்டுக்குள் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.35

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல 4 கோடியே 24 இலட்சம் ரூபாயை இன்றைக்கு எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்து, என்னுடைய பகுதியிலே கடலரிப்பைத் தடுப்பதற்கான முன்னேற்பாடு களைச் செய்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருவதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இந்த நேரத்திலே மனமாரப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தப் பகுதியிலே மீனவ கிராமங்களும், தொழிற்சாலைகளும் நிறைந்து இருக்கின்ற காரணத்தால் கடலரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைத்து, அந்தப் பகுதியிலே கடலரிப்பை நிரந்தரமாகத் தடுக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 மார்ச் 16

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வீராணம் குழாய்களைக் கொண்டுவந்து அதன் மூலம் கடலரிப்பைத் தடுப்பதற்காக பம்பாயிலிருந்து நிபுணர்களையெல்லாம் கொண்டு வந்து ஆராய்ந்து இன்றைக்கு அந்தப் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. கடலரிப்பைத் தடுப்பதற்குத் தடுப்புச் சுவர் கட்டலாம் என்ற யோசனையை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். கடரிப்பைத் தடுப்பதற்கு எந்த முறை சாத்தியம் என்பதை ஆராய்ந்து அதன் பின்னர்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் மேலும் 1½ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மற்ற பகுதிகளிலும் கடலரிப்பைத் தடுக்க வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, எது நடைமுறைக்கு சாத்தியப்படுமோ அந்த முறை பின்பற்றப்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, அது சம்பந்தமாக நடடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே விஞ்ஞான ரீதியான அடிப்படையிலேதான் அந்தப் பணிகளை எடுத்துச் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் குழாய்கள் மூலமாக கடலரிப்பைத் தடுக்கின்ற பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் குழாய்கள் அமைக்கின்ற பொழுது குழாய்கள் போடாத இடங்களில் கடலரிப்பு ஏற்படுகின்ற காரணத்தால்-காசி விசுவநாதர் கோயில் இன்றைக்குக் கடலரிப்பால் கடலிலே அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றது. பல்வேறு சாலைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழில் அதிப்ர்களும், அங்கு வாழ்கின்ற மக்களும் பீதியடைகின்ற சூழ்நிலை இருப்பதால்-மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல விஞ்ஞான ரீதியிலே கடல் அரிப்பை முழுவதுமாகத் தடுப்பதற்குத் தடுப்புச் சுவர் அமைத்தாகவேண்டுமென்ற சூழ்நிலையை மக்கள் விரும்புகின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்திற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். நன்றி, வணக்கம் எல்லாம் நீங்கள் பேசும்போது சொல்லுங்கள்.

1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலரிப்பைத் தடுக்கின்ற பணி என்பது நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார்கள். ஆகவேதான் புதிய முறையிலே கடலரிப்பைத் தடுப்பதற்கு–எண்ணூர் பகுதி தொழிற்சாலைகள் நிரம்பிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால்–இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்து இந்த யோசனையைத் தெரிவித்து இன்றைக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல சில பிரச்சினைகள் அங்கே இருந்தாலும் அதற்கான முழு ஆய்விலே நம்முடைய பொதுப்பணித் துறை பொறியாளர்களும் கட்டுமானக் கழகத்தினுடைய பொறியாளர்களும் ஈடுபட்டு இருக்கின்றார்கள். ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகளைப் பார்ப்பதற்காக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குறைகள் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 90, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

90-

கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணைக்கட்டுதல்:

* *11530*–திரு. **எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் தாலுகா, வடமட்டம் கிராமம் பாசனம் பெறும் வகையில் கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே பெட் டேம் (Bed Dam) கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் 8 ஆண்டுகளுக்குப் பிறகு மேட்டூர் அணை நிரம்பி வழிந்து காலத்தோடு தண்ணீர் திறக்கப்பட்டு எங்களுடைய மாவட்டத்தில்